செ.வெ.எண்: 3 /ஜூன் நாள் : 02.06.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

# தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 2016-17-ஆம் நிதியாண்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு மிக குறைந்த வட்டி விகிதத்தில் கடனுதவி

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவர்களின் பொருளாதார நிலையினை உயர்த்தும் நோக்குடன் 2016-17-ஆம் நிதியாண்டில் மிக குறைந்த வட்டி விகிதத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் கடனுதவி வழங்க திட்டமிட்டுள்ளது.

சிறு வணிகம் செய்ய ஒருவருக்கு அதிகபட்சம் 10 இலட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது. பெண்களுக்கான புதிய பொற்கால திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது. "மகிளா சம்ரிதி யோஜனா" திட்டத்தின் கீழ் மகளிர் தொழில் முனைய சிறு கடன் வழங்கப்படுகிறது.

மகளிர் குழு உறுப்பினர்கள், தனியாகவோ அல்லது குழுக்களாகவோ கடன் பெறலாம். ஒருவருக்கு, அதிகபட்சம் 50 ஆயிரம் ரூபாய் கடன் வழங்கப்படுகிறது.

கடன் பெற ஆண்டு வருமான வரம்பு கிராமப்புறமாயின் ரூ.98,000/- மற்றும் நகர்புறமாயின் ரூ.1,20,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

கடன் விண்ணப்பப் படிவங்களை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அலுவலகம் (மாவட்ட ஆட்சியர் அலுவலகம், இராமநாதபுரம்), கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் அலுவலகம், இராமநாதபுரம் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் / நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், இராமநாதபுரம் ஆகிய அலுவலகங்களில் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் விபரங்களுக்கு மேற்கண்ட அலுவலகங்களையும், வங்கிகளையும் தொடர்பு கொண்டு விபரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**